ශ්‍රී ලංකා ජනාධිපති

இலங்கை சனாதிபதி

**President of Sri Lanka**

## வாழ்த்துச் செய்தி

"சவாலான காலங்களில் டிஜிட்டல் நிலைமாற்றத்தை விரைவுபடுத்துதல்" என்ற கருப்பொருளின் கீழ் உலக தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சமூக தினத்தை 2021 கொண்டாடுவதில் இலங்கையும் உலகின் ஏனைய நாடுகளுடன் இணைந்துகொள்கிறது என்ற வகையில் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன்.

கோவிட் -19 நோய்த்தொற்று நிலைமையானது சமூகங்களுக்கான வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தை ஏற்றுக்கொள்வதில் வியத்தகு முன்னேற்றத்தை கொண்டுவந்துள்ளது. மேலும் ஒரு டிஜிட்டல் பொருளாதாரம் மற்றும் சமூகத்திற்கான நிலைமாற்றத்தை உருவாக்கும் விரைவான டிஜிட்டல் மாற்றத்திற்கு இடையூறான மாறுபாடுகள் இன்றியமையாதவை.

2021 ஆம் ஆண்டு உலக தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சமூக தினத்தை கொண்டாடும் விதமாக, சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியம் (ITU) தனது உறுப்பு நாடுகளை டிஜிட்டல் மாற்றத்திற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அழைத்ததோடு, சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை உறுதி செய்யும் அதே வேளையில் டிஜிட்டல் பிளவுகளைத் தடுக்கும் வகையில், இலங்கையை தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளுக்கான இடமாக மாற்றுவதிலும், 'ஸ்மார்ட் இலங்கை' என்ற தொலைநோக்குடன் அரச மற்றும் தனியார் துறைகளை தொழில்நுட்பத்துடன் இணைப்பதிலும் முழுமையான கவனம் செலுத்தும் ஒரு தேசிய டிஜிட்டல் பரிமாற்ற வீதி வரைபடத்தை இலங்கை ஆரம்பித்துள்ளது.

சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியம் (ITU) பல தசாப்தங்களாக உலகெங்கிலும் உள்ள தகவல் தொடர்பாடல் தொழிநுட்பங்களை ஏற்றுக்கொள்வதை ஊக்குவிப்பதில் செல்வாக்கு செலுத்திவருவதுடன், ஐக்கிய நாடுகளின் பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் மற்றும் சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியத்தின் 'Connect 2030' நிகழ்ச்சி நிரலை அமுல்படுத்தும்போது தகவல் தொடர்பாடல் தொழிநுட்பங்களின் பங்கை எடுத்துக்காட்டுவதில் பாரிய முயற்சிகளையும் முன்னெடுப்புகளையும் மேற்கொண்டுவருவது குறிப்பிடத்தக்கது. மேலும், 'இணைக்கப்படாதவர்களை இணைத்தல்' ('Connecting the Unconnected') மற்றும் பேண்தகு அபிவிருத்தியை அடைவதற்கான டிஜிட்டல் பரிமாற்றத்தை விரைவுபடுத்துவதில் அனைத்து பங்குதாரர்களுக்கும் தங்கள் பங்களிப்புகளை வழங்க சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியத்தின் ஊக்குவிப்பானது உலகளாவிய பார்வையில் நிலையான அபிவிருத்திக்கான தகவல் தொடர்பாடல் தொழிநுட்பங்களை ஏற்றுக்கொள்வதை உறுதி செய்யும்.

சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியம் (ITU) தனது 156 வது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகின்றது என்ற வகையில், உலக தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சமூக தினம் உலகெங்கிலும் உள்ள மக்கள் சமூகத்திற்கு பயன்மிக்கதாக அமைய எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கோட்டாபய ராஜபக்ஷ**

2021 **மே மாதம்** 15 **ஆம் திகதி**

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජය

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு

Democratic Socialist Republic of Sri Lanka